<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, செங்கல்பட்டு</u>

**<u>STC No.467/2024</u>**

எதிரி ஆஜர்

அ.சா.– 1 திரு. அறிவுடைநம்பி த/பெ. ராஜன் நாள் – 24.04.2026

சாட்சி மனுவின் பேரில் அனுமதிக்கப்பட்டு மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை–**

எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லப்படும் சமயத்தில் நான் என்ன தொழில் செய்து கொண்டிருந்தேன் என்றால் ரோடு கான்ட்ராக்ட் தொழில் செய்து கொண்டிருந்தேன். அப்கான்ஸ் என்ற நிறுவனத்தில் சப் கான்ட்ராக்கடராக பணிபுரிந்து கொண்டிருந்தேன். அரசாங்கத்திடமிருந்து நான் கான்ட்ராக்ட் எடுத்து பணிபுரியவில்லை என்று சொன்னால் சரிதான். நான் எவ்வளவு ஆண்டுகளாக சப் கான்ட்ராக்டராக பணிபுரிந்து வந்தேன் என்று கேட்டால் சுமார் 25 வருடங்கள். அதற்கான உரிமம் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. எனது மாத வருமானம் இவ்வழக்கு சம்பவ காலத்தில் என்னவென்று கேட்டால் ரூ. 1 லட்சத்திலிருந்து ரூ.1.25 லட்சம். நான் சப் கான்ட்ராக்டர் பணி செய்யும் போது பணி செய்யும் இடத்திலேயே இருப்பேனா என்று கேட்டால் பணியாட்களை அமர்த்திவிட்டு வந்துவிடுவேன். சப் கான்ட்ராக்ட் பணியை தவிர வேறு வருமானம் உள்ளதா என்று கேட்டால் செங்கல்பட்டில் 2 கட்டிடங்கள் வாடகைக்கு விட்டுள்ளேன் ஒரு பாத்திர கடை வைத்துள்ளேன். அதன் வழியாக எவ்வளவு வருமானம் வருகிறது என்று கேட்டால் வாடகை வருமானம் ரூ.2 லிருந்து ரூ.2.50 லட்சம் வரும். பாத்திர கடையில் மாதத்திற்கு ரூ.50 ஆயிரம் வருவதே பெரிய விசயம். பாத்திர கடை நான் நடத்தி வருகிறேனா அல்லது எனது சகோதரர் ஞானேஸ்வரமூர்த்தி நடத்தி வருகிறாரா என்று கேட்டால் இருவரும் சேர்ந்து நடத்தி வருகிறோம்.

நான் இதுவரை எத்தனை காசோலை வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் 7 அல்லது 8 வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன். 5 வழக்குகள் சமாதானமாகிவிட்டது. 2 வழக்குகள் தீர்ப்பாகிவிட்டது. அந்த வழக்குகள் அனைத்தும் நான் வட்டிக்கு பணம் கொடுத்து திருப்பி தராததால் போடப்பட்ட வழக்கு என்றால் சரிதான். நான் வட்டி தொழில் செய்து வருகிறேனா என்றால் இல்லை. நான் வட்டி தொழிலுக்கு உரிமம் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. நான் வருமான வரி

செலுத்துகிறேனா என்றால் 10 வருடங்களாக செலுத்துகிறேன். எதிரியை எனக்கு எப்படி தெரியும் என்றால் பாத்திர கடையில் எதிரியாகவே வந்து எனக்கு பணம் கொடுத்து உதவி செய்யுமாறு கேட்டார். இவ்வழக்கு பண பரிவர்த்தனைக்கு முன்பு எதிரியை எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் 1 வருடம். எனது கடையில் வட்டிக்கு பணம் கொடுக்கப்படும் என்று அறிவிப்பு பலகை வைத்துள்ளேனா என்றால் இல்லை. எதிரிக்கு நான் வட்டிக்கு பணம் கொடுப்பேன் என்ற விவரம் எப்படி தெரிய வந்தது என்றால் அங்கிருந்த நபர்கள் கூறி தெரிய வந்தது. நான் வட்டிக்கு பணம் கொடுப்பது பரவலாக அனைவருக்கும் தெரியுமென்றால் அவ்வாறு இல்லை முக்கியமான நபர்களுக்கு கூறியுள்ளேன்.

அரசாங்கத்திடமிருந்து உரிமம் பெறாமல் மறைமுகமாக வட்டி தொழில் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு சம்மந்தப்பட்ட பண பரிவர்த்தனையின் போது எவ்வளவு தொகை வருமானமாக எனது வருமான வரி கணக்கில் காண்பித்துள்ளேன் என்று கேட்டால் ஒரு வருடத்திற்கு ரூ.9 லட்சம் நான் கணக்கு காண்பித்துள்ளேன். எனக்கு மாத வருமானம் ரூ.3.50 லட்சத்திற்கு மேல் இருக்கும் போது வருடத்திற்கு ரூ.9 லட்சம் தான் கணக்கு காட்டியுள்ளேன் என்று சொன்னால் செலவு தொகை போக மீதி தொகையை கணக்கு காட்டியுள்ளேன். நான் எனது மாத வருமானமாக வரும் ரூ.3.50 லட்சத்தை எனது வருமான வரி கணக்கில் காண்பித்துள்ளேனா என்றால் காண்பித்துள்ளேன். எனக்கு வரும் சுமார் ரூ.42 லட்சம் வருமானத்தில் செலவாக ரூ.33 லட்சம் வந்துள்ளது என்றால் சரிதான். எனது வழக்கு பரிவர்த்தனை காலத்திற்குண்டான வருமான வரி கணக்கை தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். வருமான வரி கணக்கு தாக்கல் செய்யும் போது வருமானம், நான் கடன் பெற்ற தொகை, நான் கடன் கொடுத்த தொகை ஆகியவற்றை காண்பிப்பார்கள் என்றால் சரிதான்.

ரூ.71 லட்சத்தை நான் எந்த வகையில் கொடுத்தேன் என்றால் ரொக்கமாக கொடுத்தேன். மேற்படி தொகையினை எனது உறவினர்கள் மற்றும் நண்பர்களிடம் பெற்று கொடுத்தேன். மேற்படி தொகையை யார் யாரிடமிருந்து பெற்றேன் என்றால் எனது மாமனார் ஆறுமுகத்திடமிருந்து ரூ.30 லட்சமும், எனது நண்பர் பிரபாகரனிடமிருந்து ரூ.20 லட்சமும், மற்றொரு நண்பரான தேவராஜனிடமிருந்து ரூ.15 லட்சம் பெற்றேன். மேற்கூறிய விவரங்களை நான் எனது புகார் மற்றும் பிரமாண

வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி தொகைளை நான் மேற்சொன்ன நபர்களிடமிருந்து வட்டிக்கு பெற்றேனா என்றால் வட்டிக்கு தான் பெற்று கொடுத்தேன். நான் அதற்காக அடமான பத்திரமோ, புரோ நோட்டோ எழுதி கொடுத்தேனா என்றால் இல்லை நம்பிக்கையின் பேரில் கொடுத்தார்கள். அந்த பணத்தை நான் திருப்பி கொடுத்தேனா என்றால் கொடுத்துவிட்டேன். எந்த தேதியில் கொடுத்தேன் என்றால் பணம் பெற்ற 2 வருடத்தில் கொடுத்துவிட்டேன். எதிரி என்ன வேலை செய்கிறார் என்ற விவரம் தெரியுமா என்றால் ஆசிரியராக உள்ளார். அவரது கணவர் என்ன வேலை செய்கிறார் என்ற விவரம் தெரியுமா என்றால் டெய்லர். எதிரியின் மாத வருமானம் எவ்வளவு என்றால் தெரியாது. அவரது கணவரின் மாத வருமானம் என்னவென்றால் தெரியாது. அவரின் கணவர் பெயர் தெரியுமா என்றால் ஜெயராமன் என்று கேள்விபட்டிருக்கிறேன்.

அவர் கடை வைத்திருக்கிறாரா அல்லது டெய்லராக வேலை செய்கிறாரா என்றால் தெரியாது. எதிரிக்கு சொந்த வீடு உள்ளதா என்றால் நான் கடன் கொடுக்கும் போது இருந்தது தற்போது இருக்கிறதா என்பது தெரியாது. எதிரி எந்த இடத்தில் சொந்த வீடு வைத்துள்ளார் என்றால் காண்டீபன் வேதாசலம் தெரு. எதிரிக்கு சொந்த வீடு இருக்கிறது என்பதற்கான ஆவணம் எதாவது பார்த்தேனா என்றால் இல்லை. எதிரியின் குடும்ப விவரம் தெரியுமா என்றால் தெரியாது. ரூ.71 லட்சத்திற்கு வட்டி எதிரி எவ்வளவு செலுத்தவேண்டுமென்றால் மாதம் 2 சதவிகிதம் வட்டி. எவ்வளவு வட்டி தொகையாக வரும் என்று கேட்டால் ரூ.1,42,000/– வரும். எதிரிக்கு அந்த ரூ.71 லட்சத்தை திருப்பி கொடுக்கும் திறன் உள்ளதா என்றால் அவர் வேறு அசையா சொத்தை வாங்கினார் அதை விற்று பணத்தை திருப்பி தருவதாக சொன்னார். எந்த ஊரில் எதிரி அசையா சொத்து வாங்கினார் என்று கேட்டால் மரக்காணம் பக்கத்தில் உள்ள செட்டிகுப்பம் என்ற பகுதியில். நான் வட்டிக்கு ரூ.71 லட்சம் அளவிற்கு பணம் கொடுத்தால் அதற்கு பாதுகாப்பிற்காக சொத்து அடமானம், அல்லது ஆவணங்களை பெற்று கொண்டு தான் வட்டிக்கு கொடுப்பேன் என்றால் சரிதான்.

நான் ஏற்கனவே 7, 8 நபர்களுக்கு பணம் கொடுத்த போது மேற்சொன்னவாறு தான் செய்தேனா என்றால் காசோலை மட்டும் பெற்று கொண்டு பணம் கொடுத்துள்ளேன். எதிரி என்னிடம் பணம் கேட்டார் என்றால் 3 வது மாதம் முதல் வாரம் 2022 ல். எவ்வளவு தொகை என்னிடம் கடனாக எதிரி கேட்டாரென்றால் ரூ.1

கோடி கேட்டார். நான் எவ்வளவு தருவதாக கூறினேன் என்றால் எனக்கு எவ்வளவு தொகை கிடைக்கிறதோ அதனை தருகிறேன் என்று சொன்னேன். எதிரி செட்டிகுப்பத்தில் வாங்கிய சொத்தின் ஆவணத்தை நான் பார்த்தேனா என்றால் இல்லை. எதிரி இடத்தை வாங்கினாரா என்று தெரிந்து கொண்டேனா என்றால் பின்னிட்டு 2 மாதம் கழித்து தெரிந்து கொண்டேன். எதிரிக்கு ஆசிரியர் தொழில் வருமானம் தவிர வேறு எந்த வருமானமும் கிடையாது என்றால் சரிதான். நான் 2 மாதம் கழித்து சொத்தை பெற்றது குறித்து தெரிந்து கொண்ட போது என்ன ஆவணம் பார்த்தேன் என்று கேட்டால் பவர் ஆவணம் பார்த்தேன். எந்த தேதியில் அந்த ஆவணம் பதிவு செய்யப்பட்டது என்றால் நான் பார்க்கவில்லை. அதே சமயத்தில் எனது சகோதரரும் எதிரிக்கு பணம் கொடுத்ததாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் பின்னிட்டு அந்த விவரம் எனக்கு தெரிய வந்தது. அவர் எவ்வளவு தொகை கொடுத்துளார் என்றால் எனக்கு தெரியாது. இருவரும் ஒரே வழக்கறிஞர் மூலமாக தான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். இரு வழக்குகளும் ஒரே நாட்களில் தான் வந்தது என்றால் சரிதான். நான் எனது தம்பியிடம் எவ்வளவு தொகை கொடுத்தார் என்ற விவரத்தை கேட்டேனா என்றால் இல்லை.

நான் என்ன தேதியில் எந்த இடத்தில் வைத்து எதிரிக்கு ரூ.71 லட்சம் பணம் கொடுத்தேன் என்றால் 06.03.2022 எனது வீட்டில் காலை 07.00 மணியளவில் கொடுத்தேன். அந்த சமயத்தில் யார் யார் இருந்தார்கள் என்றால் எனது தம்பி ஞானேஸ்வரமூர்த்தி மற்றும் எனது அத்தை மகன் முருகதாஸ் என்பவர் இருந்தார். எதிரியுடன் யார் வந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. செட்டிகுப்பத்தில் எதிரி வாங்கிய இடத்தின் விஸ்தீரணம் கொண்ட நிலம் பெற்றார் என்றால் 6 ஏக்கர். எதிரியின் சொந்த வீட்டை அடமானமாக நான் பணம் கொடுக்கும் போது கேட்கவில்லையா என்றால் கேட்கவில்லை. 06.03.2022 முன்பு எனக்கும் எதிரிக்கும் பணபரிவர்த்தனை இருந்ததா என்றால் இல்லை. எந்த நம்பிக்கையின் பேரில் எந்த அடமானமும் பெறாமல் எதிரிக்கு பணம் கொடு்த்தேன் என்றால் எதிரி ஏற்கனவே நிலம் வாங்கி விற்பனை செய்கிறார் என்று மற்றவர்கள் கூறினார்கள் அதனால் பணம் கொடுத்தேன். யார் அந்த விவரத்தை கூறினார்கள் என்றால் எனது தம்பி ஞானேஸ்வரமூர்த்தி தான் கூறினார். எதிரி புரோ நோட் எழுதி கொடுத்தார், காசோலை கொடுத்தார் அதன் அடிப்படையில் பணம் கொடுத்தேன். 06.03.2022 அன்றே

காசோலை கொடுத்துவிட்டாரா என்றால் இல்லை அன்றைய தேதியில் புரோ நோட் மட்டும் தான் கொடுத்தார் 4 மாதம் மட்டுமே வட்டி செலுத்தினார் நான் மீதி தொகையை மீண்டும் மீண்டும் கேட்ட போது 09.03.2024 அன்று காசோலை கொடுத்தார். எனது தம்பி கொடுத்த நம்பிக்கையின் பேரில் எதிரிக்கு நான் பணம் கொடுத்தேன் என்றால் சரிதான்.

எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.